2013 ஏப்ரல் 15]

இன்னும் எந்தெந்தப் பகுதிகளில் மின் கம்பிகள் புதை மின்வடங்களாக மாற்றப்படாமல் இருக்கின்றன என்பதைக் கணக்கெடுத்து, அவற்றையெல்லாம் படிப்படியாக, விரைவில் பூமிக்கடியில் புதை மின்வடங்களாக மாற்றுகின்ற பணிகளை அரசு மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 211, மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

211—

மானிய விலையில் நிலக்கரி

***3895—திரு. ர.ம. பாபு முருகவேல்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல் சூளைகளுக்கு மானிய விலையில் நிலக்கரி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மைய அரசின் கோல் இந்தியா நிறுவனமானது, தமிழ்நாட்டிலுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஆண்டிற்கு 60,000 மெட்ரிக் டன் நிலக்கரியை விநியோகம் செய்ய, சிட்கோ நிறுவனத்தை முகவர்களாக நியமித்திருக்கிறது. அதனடிப்படையில் தமிழ் மற்றும் ஆங்கில செய்தித் தாள்களில் சிட்கோ நிறுவனம் விளம்பரம் செய்தது. 2 தொழில் முனைவோர்கள் செங்கல் சூளைக்கு ஆண்டுக்குத் தலா 800 மெட்ரிக் டன் நிலக்கரியும், 3 தொழில் நிறுவனங்கள் 6,500 மெட்ரிக் டன் நிலக்கரியும் வேண்டி இசைவு தெரிவித்துள்ளார்கள். கோல் இந்தியா லிமிடெட் நிறுவனம் ஒதுக்கீடு செய்த நிலக்கரியில், குறைந்தபட்சம் 50 சதவிகிதம் நிலக்கரி வாங்க தொழில் முனைவோர் விருப்பம் தெரிவிக்காததாலும், 2 செங்கல் சூளை தொழில் முனைவோர் மட்டுமே இசைவு தெரிவித்துள்ளதாலும், குறைந்தபட்சம்

அனுமதிக்கப்பட்ட அளவிற்கு யாரும் முன்வராததாலும் செங்கல் சூளைக்கு மானிய விலையில் நிலக்கரியை வழங்க சாத்தியமில்லை என தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.*

திரு. ர.ம. பாபு முருகவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுமானத் தொழிலுக்கு மிக முக்கியமான மூலப்பொருளாக செங்கல் இருக்கின்றது. செங்கல் சூளை தொழிலானது, தமிழகத்திலே ஒரு குறுந் தொழிலாக இருக்கின்றது. மிகப் பெரிய அளவிலே, ஏறத்தாழ இலட்சக்கணக்கான செங்கல் சூளைகள் தமிழகத்தில் இருக்கின்றன. குறிப்பாக, ஆரணியிலே 430 செங்கல் சூளைகளுக்குமேல் இருக்கின்றன. செங்கல் சூளைக்குத் தேவையான நிலக்கரியானது ஆந்திரா, பீகார் மற்றும் மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களிலிருந்து ஒரு டன் ஏறத்தாழ 7,500/– ரூபாயிலேயிருந்து 12,500/– ரூபாய் வரையிலே இன்று கொள்முதல் செய்யப்படுகின்றது. நிலக்கரியை கொள்முதல் செய்து விற்பனை செய்கின்றபொழுது அந்த அளவிற்கு செங்கல்லின் விலையும் அதிகரிக்கின்றது. எனவே, கட்டுமானப் பொருட்களினுடைய விலையேற்றத்தினால், இன்று கட்டுமானத் தொழிலே முடங்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அதைப் போக்கக்கூடிய விதத்திலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தமிழக அரசினுடைய கவனத்திற்கு இதை எடுத்துச் சென்று, பிற மாநிலங்களில் பெறக்கூடிய நிலக்கரியை, தமிழக அரசே கொள்முதல் செய்து, அதை மானிய விலையிலே செங்கல் சூளை உரிமையாளர்களுக்கு வழங்குகின்றபட்சத்திலே, செங்கல்லின் விலையும் குறையக்கூடிய வாய்ப்பிருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைச் செய்து தருவதற்கு முன்வருவார்களா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ப. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், செங்கல் சூளையினுடைய முகவர்களுக்கு எல்லாம் சில பணிகளைச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.*

2013 ஏப்ரல் 15]

அதனடிப்படையிலேதான், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு நிலக்கரியை இறக்குமதி செய்கிறவகையில் சிட்கோவை முகவராக அமர்த்தியது. ஆனால், தொழில் முனைவோர்கள் எல்லாம் வெளியிலே குறைந்த விலைக்கு நிலக்கரி கிடைக்கிறபோதோ அல்லது தாராளமாகக் கிடைக்கிறபொழுதோ மற்ற இடங்களிலே வாங்கிக்கொள்கிறார்கள். எனவே, சிட்கோ நிறுவனத்தை அவர்கள் அணுகாத காரணத்தினாலேதான் அதைச் செய்ய இயலவில்லை என்பதைத்தான் சொல்கிறேன். ஏனென்றால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இதைச் செய்வதற்காக முன்முயற்சி எடுத்திருக்கிறது என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இதுமட்டுமல்ல. வேறு சில பணிகளுக்கு அரசு, இரும்பு, எஃகு, மெழுகு மற்றும் பொட்டாசியம் குளோரைடு போன்றவற்றையும் சிட்கோமூலமாக சிறு தொழில்களுக்கெல்லாம் வழங்கிக் கொண்டிருக்கிறது. இப்பொழுதும் சொல்கிறேன், 50 சதவிகிதமாவது பெற்றால்தான் அதை நாம் எடுத்துச் செய்ய இயலும் என்பதற்காகத்தான் மானியத்துடன் நிலக்கரி தர இயலவில்லை. அந்த அளவிற்கு அது வர வேண்டுமானால், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய முகவர்களுக்கு எல்லாம் நீங்கள் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, அவர்கள் அரசை அணுகுகிறபொழுது, அவர்களுக்கு சிட்கோமூலமாக அந்த மானியத்தை நிச்சயமாகப் பெற்றுத் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்முயற்சி எடுப்பேன் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மணல் கடத்தலிலே இன்று கடுமையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்கிறது. அதேவேளையிலே, செங்கல் சூளைக்குப் பயன்படக்கூடிய மூலப்பொருளான **இன்று ஆரணி தொகுதியில் இருக்கின்றது. எனவே, அதை கருத்திலே கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள். . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பாபு முருகவேல், கேள்வி கேளுங்கள். கேள்விக்குத் தொடர்பில்லாமல் பேச வேண்டாம். செங்கல் சூளை பற்றிக் கேளுங்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல் சூளைக்குத் தேவையான மூலப்பொருள் இது. மூலப்பொருளின் நிலைமை இன்றைக்கு இந்த அளவிற்கு இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்கு உகந்தது இல்லை என்றாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செங்கல் சூளைக்கு அந்த மண் தேவைப்படுகிறது என்று சொல்கிறார்கள். அப்படி அது தேவைப்படுமேயானால், அதிகாரிகளைச் சரியான முறையில் அணுகி, விண்ணப்பங்களை முறையாகச் செய்வார்களேயானால், அதைப் பற்றி அரசு சிந்திக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள் மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் ** என்று சொன்னது அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

முற்பகல் 10–20

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பல செங்கல் சூளைகள் உள்ளன. இந்தத் தொழிலை நம்பி பல ஆயிரம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அதனால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லரசு, அந்தச் செங்கல் சூளைத் தொழிலாளர்களுடைய நலனைக் கருத்தில்கொண்டு, மானிய விலையில் நிலக்கரி வழங்குவதற்கு வாய்ப்புகள் இல்லை என்று சொன்னாலும், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2013 ஏப்ரல் 15]

தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, மானிய விலையில் நிலக்கரி வழங்குவதற்கு அரசு முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ப. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலேயும் இதே பதிலைத்தான் சொன்னேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய பகுதியிலே இருக்கக்கூடிய அந்தச் செங்கல் சூளைத் தொழில் முனைவோர்களுக்கு, அவர்கள் சிறப்பாக அந்தத் தொழிலைச் செய்திட உதவிட வேண்டுமென்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதனைச் செய்யும் என்ற நம்பிக்கையோடு, ஆர்வத்தோடு அவர் அந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார். அந்தத் தொழில் முனைவோர்கள் சிட்கோ நிறுவனத்திடம் இவ்வளவு வேண்டுமென்று விண்ணப்பம் செய்வார்களேயானால், நிச்சயமாக மானிய விலையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சிட்கோ நிறுவனத்தின்மூலமாகச் செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 212, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

212—

அங்கன்வாடி மையம்

***11732—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் வட்டம், குமரலிங்கம், ஜெ.ஜெ. நகர்–II–ல், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்மூலம் புதிய அங்கன்வாடி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?